**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

**தஞ்சாவூர்.**

**2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 ஆம் நாள் திங்கட்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2052 – கார்த்திகை திங்கள் 27 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண். 135/2018ல் இடைநிலை மனு எண். 75/2019**

**(1) சுசீலா கிள்ளிவளவன்**

**(2) சித்திரைப்பாவை**

**.........மனுதாரர்கள்/ 4 மற்றும் 5 பிரதிவாதிகள்**

**/எதிர்/**

**(1) இளந்திரையன் ( இறந்துவிட்டார்)**

**(2) மணிமொழி**

**(3) கண்ணன் ..........எதிர்மனுதாரர்கள் 1 முதல் 3 வாதிகள்**

**(4) உமா ரவிவர்மன்**

**(5) கரிகாலன்**

**(6) அபிநயா ........... ..........எதிர்மனுதாரர்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள்**

**(7) சாவித்ரி**

**(8) மதுமதி**

**(9) மாறன் .................எதிர்மனுதாரர்கள் 4 முதல் 6 வாதிகள்**

**(இடைநிலை மனு எண்.39/2021ல் 18.2.2021 அன்று ஏற்பட்ட உத்தரவின்படி 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக மனுவில் சேர்க்கப்பட்டு இடைநிலை மனு எண்.75/2021ல் 5.8.2021 அன்று ஏற்பட்ட உத்தரவின்படி மனு திருத்தம் செய்யப்பட்டுள்ளது)**

இம்மனு 24.11.2021 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. **D.சுவாமிநாதன்** அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 மற்றும் 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. **A.வெற்றிச்செல்வன்** அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. **R. சண்முகசுந்தரம்** அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படாத நிலையில் வருகையில்லா தரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தவிடக்கோரி இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 7 விதி 11ன்படி மனுதாரர்/4ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

(2) இந்த மனுதாரர் அசல் வழக்கின் 4ஆம் பிரதிவாதியாவார். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் சுவாதீனமும், மாற்றுப்பரிகாரமாக பாகப்பிரிவினை மற்றும் "C" அட்டவணைச் சொத்தைப்பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். வழக்கு "A" மற்றும் "C" அட்டவணை சொத்துக்கள் ஒரே சொத்துக்களாகும். "A" அட்டவணை சொத்தானது கும்பகோணம் லிட்டில் பிளவர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்த துரைமாணிக்கம் என்பரால் அவரது வருமானத்தைக்கொண்டு வாங்கப்பட்டதாகும். அவர் உயிருடன் இருந்தபோது அன்பு மற்றும் பாசத்தால் அவரது மகன் கிள்ளிவளவன் என்பவருக்கு 14.4.1990 ஆம் தேதியில் பதிவான உயில் எழுதி வைத்தார். 30.6.1993ஆம் தேதி

துரைமாணிக்கம் இறந்ததும் உயில் நடைமுறைக்கு வந்தது- 1ஆம் மனுதாரரின் கணவரான கிள்ளிவளவன் "A" அட்டவணை சொத்திற்கு முழு உரிமையாளரானார். அசல் வழக்கின் 2ஆம் வாதி இவ்வழக்கின் "B" அட்டவணை சொத்தைப்பொறுத்து திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 82/1994 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தார். அதில் அவர் 23.12.1991 தேதியில் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி தனக்கு முழு உரிமையானது என கட்சி செய்திருந்தார். அவ்வழக்கில் கிள்ளிவளவன் அந்த குடும்ப ஏற்பாடு மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், அவரது தந்தை 14.4.1990 ஆம் தேதியில் தாவா "A" அட்டவணைசொத்தைப் பொறுத்து பதிவான உயில் எழுதி வைத்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். முழுமையான விசாரணைக்குப்பிறகு அந்த வழக்கில் 26.9.1997ல் வாதி கோரியவாறு தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது, தாவா "A" அட்டவணை சொத்தைப் பொறுத்து 14.4.1990 ஆம் தேதியில் உயில் எழுதப்பட்டதைக் குறித்து 2ஆம் பிரதிவாதிக்கு அந்த வழக்கு சமயத்திலேயே தெரிந்திருந்தும் கடந்த 22 ஆண்டுகளாக 2ஆம் வாதி எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை. 1ஆம் வாதி கிள்ளிவளவனுக்கு எதிராக கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா "A" அட்டவணை சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்-308/1995 என வழக்கை தாக்கல் செய்திருந்தார். அதிலும், கிள்ளிவளவன் 14.4.1990 தேதியிட்ட துரைமாணிக்கம் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் சொத்தானது தனக்கு

சொந்தமானது என எதிர்வழக்குரையில் தெரிவித்திருந்தார். அந்த வழக்கு 6.12.1999ஆம் தேதியில் தள்ளுபடியானது. எனவே, 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு 14.4.1990 ஆம் தேதியிட்ட துரைமாணிக்கம், கிள்ளிவளவன் பெயருக்கு எழுதி வைத்த உயில் குறித்து கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் என்பதால் இவ்வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டதாகும். 1 முதல் 6 பிரதிவாதிகள் உயில் ஆவணத்தைப் பொறுத்து கடந்த 20 வருடங்களாக எந்த கேள்வியும் எழுப்பவில்லை. 1 முதல் எதிர்மனுதாரர்கள் உயில் குறித்து தெரிந்து 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். எனவே, வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தவிடக்கோரி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3ஆம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

(3) இம்மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா "A" அட்டவணை சொத்தானது துரைமாணிக்கம் என்பவரின் சுயார்ஜித சொத்து என்பதும், அதனை துரைமாணிக்கம் அவரது சொந்த வருமானத்தைக் கொண்டு வாங்கினார் என்பதும் தவறானது. மேற்படி துரைமாணிக்கம் உயிருடன் இருந்தபோது அன்பு மற்றும் பாசத்தால் அவரது மகன் கிள்ளிவளவன் என்பவருக்கு 14.4.1990 ஆம் தேதியில் பதிவான உயில் எழுதி வைத்தார் என்பதும் தவறானது. தாவா சொத்துக்கள் துரைமாணிக்கத்தின் சுயார்ஜித சொத்துக்களல்ல. அவை துரைமாணிக்கத்தின் கூட்டுக்குடும்ப சொத்துக்களாகும். 2 ஆம் வாதி தாவா "B" அட்டவணைச் சொத்து குறித்து 1ஆம் மனுதாரரின் கணவரான கிள்ளிவளவனுக்கு எதிராக நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்பது உண்மை. வாதி 23.12.1991 தேதியிட்ட எழுத்து மூலமான குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 82/1994 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் கிள்ளிவளவன் தவறான சங்கதிகளுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் வாதிக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், 1ஆம் வாதி கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 308/1995 தாக்கல் செய்து அதில் தவறான சங்கதிகளுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்து மேற்படி வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்பது உண்மை. துரைமாணிக்கம் 14.4.1990 தேதியில் எவ்வித உயிலையும் எழுதிவைக்கவில்லை. மேற்படி உயில் மோசடியானது மற்றும் 1 ஆம் மனுதாரரின் கணவர் கிள்ளிவளவனால் போலியாக தயாரிக்கப்பட்டது. 1, 2 பிரதிவாதிகள் 23.12.1991 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். 1ஆம் மனுதாரரோ, கிள்ளிவளவனோ மேற்படி 20 வருடங்களாக நிரூபிக்கவில்லை. இவ்வழக்கு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்படவில்லை. எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**<u>(4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்</u>**

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>**

(5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/4 ஆம் பிரதிவாதி வழக்குரையை நிராகரிக்கக்கோரி உ.வ.வி.மு.சட்டம்

கட்டளை 7 விதி 11ன்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் வழக்குச் சொத்துக்களைப் பொருத்து விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மாற்றுப்பரிகாரமாக பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது . வழக்கு "A" மற்றும் "C" அட்டவணை சொத்துக்கள் ஒரே சொத்துக்களாகும். "A" அட்டவணை சொத்தானது கும்பகோணம் லிட்டில் பிளவர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்த துரைமாணிக்கம் என்பரால் அவரது வருமானத்தைக்கொண்டு வாங்கப்பட்டதாகும் எனவும், அவர் உயிருடன் இருந்தபோது அன்பு மற்றும் பாசத்தால் அவரது மகன் கிள்ளிவளவன் (1 ஆம் மனுதாரரின் கணவர்) என்பவருக்கு 14.4.1990 ஆம் தேதியில் பதிவான உயில் எழுதி வைத்ததாகவும், 30.6.1993 ஆம் தேதி துரைமாணிக்கம் இறந்ததும் உயில் நடைமுறைக்கு வந்தது எனவும், 1 ஆம் மனுதாரரின் கணவரான கிள்ளிவளவன் "A" அட்டவணை சொத்திற்கு முழு உரிமையாளரானார். அசல் வழக்கின் 2 ஆம் வாதி இவ்வழக்கின் "B" அட்டவணை சொத்தைப்பொறுத்து திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 82/1994 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாகசல் செய்தார் எனவும், அதில் அவர் 23.12.1991 தேதியில் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி தனக்கு முழு உரிமையானது என கட்சி செய்திருந்ததாகவும், அவ்வழக்கில் கிள்ளிவளவன் அந்த குடும்ப ஏற்பாடு மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், அவரது தந்தை 14.4.1990 ஆம் தேதியில் தாவா "A"

அட்டவணைசொத்தைப் பொறுத்து பதிவான உயில் எழுதி வைத்ததாகவும் குறிப்பிட்டிருந்தார் எனவும், முழுமையான விசாரணைக்குப்பிறகு அந்த வழக்கு தள்ளுபடியானது, தாவா "A" அட்டவணை சொத்தைப் பொறுத்து 14.4.1990 ஆம் தேதியில் உயில் எழுதப்பட்டதைக் குறித்து 2 ஆம் பிரதிவாதிக்கு அந்த வழக்கு சமயத்திலேயே தெரிய வந்துவிட்டது எனவும், அவ்வாறு தெரிந்திருந்தும் கடந்த 22 ஆண்டுகளாக 2 ஆம் வாதி எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை எனவும் வாதிட்டார். மேலும், 1 ஆம் வாதி கிள்ளிவளவனுக்கு எதிராக கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா "A" அட்டவணை சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்-308/1995 என வழக்கை தாக்கல் செய்திருந்தார். அதிலும், கிள்ளிவளவன் 14,4,1990 தேதியிட்ட துரைமாணிக்கம் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் சொத்தானது தனக்கு சொந்தமானது என எதிர்வழக்குரையில் தெரிவித்திருந்தார். அந்த வழக்கு 6.12.1999 ஆம் தேதியில் தள்ளுபடியானது. எனவே, 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு 14.4.1990 ஆம் தேதியிட்ட துரைமாணிக்கம், கிள்ளிவளவன் பெயருக்கு எழுதி வைத்த உயில் குறித்து கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் என்பதால் இவ்வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டதாகும் என வாதிட்டார். மேலும், 1 முதல் 6 பிரதிவாதிகள் உயில் ஆவணத்தைப் பொறுத்து கடந்த 20 வருடங்களாக எந்த கேள்வியும் எழுப்பவில்லை. 1 முதல் எதிர்மனுதாரர்கள் உயில் குறித்து தெரிந்து 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். வாதிகள் அசல் வழக்கு எண். 308/95, 82/94 ஆகிய வழக்குளை மறைத்து கறைபடிந்த கரங்களுடன் வழக்கை

தாக்கல் செய்துள்ளனர். எனவே, அசல் வழக்கு காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்டது என்பதால் வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என வாதிட்டுள்ளார் என வாதிட்டுள்ளார்.

(6) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில், வழக்கு சொத்துக்கள் துரைமாணிக்கம் அவரது பூர்வீக சொத்தை விற்று வீடு வாங்கினார். வழக்கு சொத்து கூட்டுக்குடும்ப சொத்தாகும். துரைமாணிக்கம் சொத்தை கூட்டுக்குடும்ப சொத்து என அனுபவித்து வந்தார். அசல் வழக்கு 82/1994 கிள்ளிவளவனுக்கு எதிராக கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2 ஆம் வாதி வழக்கு "B" அட்டவணை சொத்தைப்பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கில் கிள்ளிவளவன் பொய்யான சங்கதிளுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்து முழுமையான விசாரணைக்கு பின்னர் வாதிகளுக்கு ஆதரவாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டது- 1 ஆம் பிரதிவாதி கிள்ளிவளவனுக்கு எதிராக கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 308/1995 ம் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. 14.4.1990 தேதியில் துரைமாணிக்கம் உயில் எழுதி வைக்கவில்லை. உயில் மோசடியாக கிள்ளிவளவனால் ஏற்படுத்தப்பட்டது. வாதிகள் 23.12.1991 ஆம் தேதியிட்ட குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் அசல் வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்குகளில் 14.9.1990 தேதியிட்ட உயில் நிரூபிக்கப்படவில்லை. அதனால் வழக்கு காலவரையறையால் பாதிக்கப்படவில்லை. இம்மனுவில் தகுதி எதுவும் இல்ல. எனவே, இம்மனுவை

தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டுள்ளார்.

(7) இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் இல்லை.

(8) இருதரப்பு வாதங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலிக்கையில், இம்மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 அசல் வழக்குஎண். 308/1995 ன் வழக்குரையின் நகல். ம.சா.ஆ.1 வழக்கு இளந்திரையன் (1 ஆம் வாதி )கிள்ளிவளவன் (1 ஆம் பிரதிவாதியின் கணவர்) ஆகியோருக்கு எதிராக நிரந்தர உறுத்துககட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சாஆ.2 மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் நகல். எதிர்வழக்குரையின் 9 ஆவது பத்தியில் 14.4.1990 ஆம் தேதியில் பதிவான உயில் எழுதியபின்னர் அவரது தந்தைக்கு வழக்குச் சொத்தைப் பொறுத்து குடும்ப ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை என சொல்லியுள்ளார். ம.சா.ஆ.3 அசல் வழக்குஎண். 308/1995 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் நகல். அதன்படி வழக்கு தவறுகைக்காக தள்ளுபடியானதாகக் கண்டுள்ளது. ம.சா.ஆ.4 அவ்வழக்கின் தீர்ப்புரையின் நகல். ம.சா.ஆ.5 திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 92/1994 வழக்குரையின் நகல். அதன்படி 2 ஆம் வாதி மணிமொழி, கிள்ளிவளவனுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மசா.ஆ.6 அவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் நகல். அதில் 6 ஆம்

பத்தியில் 14.4.1990 தேதியிட்ட உயில் பற்றி குறிப்பிடப்பட்டுளள்து. அவரது தந்தை துரைமாணிக்கம் இறந்த தேதி 30.6.1993 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 அசல் வழக்கு எண். 92/1994 வழக்கின் தீர்ப்பாணையின் நகல். அதன்படி வழக்கின் பிரதிவாதி புனவாசல் கிராமத்தில் உள்ள சர்வே எண். 188/1 ல் உள்ள கதவிலக்கம் 3/48 ல் உள்ள வாதியின் அமைதியான அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மூலம் தடுக்கப்படுகிறார் என கண்டுள்ளது. ம.சா.ஆ.8 அசல் வழக்கு எண். 82/1994 வழக்கின் தீர்ப்புரையின் நகலாகும். மேற்படி தீர்ப்பிரையின் 6 ஆவது பத்தியில் " இவ்வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கு என்பதால் வழக்குச் சொத்தைப்பொறுத்து பிரதிவாதி இடையூறு செய்தார் என்பதால் வாதியின் அனுபோகத்தில் அன்றைய தேதியில் வழக்கிடைச் சொத்து இருந்ததா என்பதையும் ஆராயப்படவேண்டும். வா.சா.ஆ.1 ஐப் பொறுத்து குடும்ப ஏற்பாடு நடந்ததா, அதன் மூலம் இந்த சொத்து கிடைத்ததா, பொய்யாக வா.சா.ஆ 1. தயாரிக்கப்பட்டதா என்ற பொருண்டைகள் குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கில் விரிவாக ஆராயப்பட வேண்டியதில்லை " என கண்டுள்ளது. ம.சா.ஆ.9 14.4.1990 ல் துரைமாணிக்கம் எழுதிவைத்த உயில்பத்திரத்தின் சான்றிட்ட நகலாகும்.

( 9 ) வழக்குரை சங்கதிகளில், அசல் வழக்கு சொத்துக்கள் துரைமாணிக்கத்தின் கூட்டுக்குடும்ப சொத்து என்றும் அவர் பூர்வீக சொத்தை விற்று தன் பெயரில் கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து வீடு வாங்கினார் என்றும், வழக்கு "B" அட்டவணைச் சொத்தானது துரைமாணிக்கம் அவரது மூதாதையரிடமிருந்து

இறங்குரிமையில் கிடைத்த சொத்து என்றும் வழக்கு "A" . "B" அட்டவணைச் சொத்துக்களை துரைமாணிக்கம் கூட்டுக்குடும்ப சொத்தாக அனுபவித்தார் என்றும், துரைமாணிக்கம் இறப்பதற்கு முன்பே அவரது திருமணமான மகன்கள் தனித்து வாழ்வதற்காக வீட்டைப் பொறுத்து குடும்ப ஏற்பாடு செய்தார் என்றும், பின்னர் அது 13.2.1991 ஆம் தேதியில் ஆவணமாக எழுதப்பட்டது என்றும், அதன்பின்னர் 13.6.1993 ஆம் தேதி அவரது மகன்கள் 1 முதல் 3 வாதிகள் மற்றும் மகன் கிள்ளிவளவன் 4, 5 பிரதிவாதிகள் வாரிசுகளாக விட்டுவிட்டு 21.2.2018 ல் இறந்துவிட்டார் என்றும், கூட்டுக்குடும்ப ஏற்பாட்டின்படி "A" அட்டவணையில் கண்ட 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டவையாகும். அதில் வாதிகளும், பிரதிவாதிகளும் அமைதியான முறையில் வசித்து வந்துள்ளனர். வாதிகள் கும்பகோணத்திற்கு வெளியே வசித்து வருகிறார்கள் . உறவுமுறையை அனுகூலமாக எடுத்துக்கொண்டு 4 ஆம் பிரதிவாதியும் அவரது உறவினர்களும் தாவா சொத்தில் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வந்துள்ளனர். 4 ஆம் பிரதிவாதி தாவா சொத்தின் 1 ஆவது அயிட்டத்தை 3 ஆம் நபர்களிடம் விற்க முயற்சித்தார். அது தெரிந்து வாதிகள் வில்லங்கச்சான்று வாங்கி பார்த்தபோது 9.11.2017 ஆம் தேதி கிள்ளிவளவன் 4, 5 பிரதிவாதிகளுக்கு செல்லத்தகாத செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அதன்பிறகு 4 ஆம்பிரதிவாதி வழக்குச்சொத்தை காலி செய்ய மறுக்கிறார். 4,5 பிரதிவாதிகள் எவ்வித ஆவணமுமின்றி பழைய கட்டித்தை இடித்துள்ளனர். இருந்தபோதிலும், குடும்ப ஏற்பாட்டில் ஒதுக்கப்பட்டவாறு சில பகுதிகள் பூமியில் அடையாளம் காணும் வகையில் உள்ளன. 4, 5 பிரதிவாதிகள்

மொத்த சொத்தையும் 3 ஆம் தரப்பினருக்கு கிரயம் செய்ய முயற்சிக்கின்றனர். வழக்கு சொத்து வாதிகளுக்கு முழு உரிமையுடைய சொத்தாகும். பிரதிவாதிகளுக்கு வழக்குச் சொத்தில் எந்த உரிமையும் இல்லை. எனவே, வாதிகள் வழக்கு சொத்து வாரிகளுக்குசு உரிமையானது என விளம்புகை பரிகாரமும் , சொத்து சுவாதீன மீட்பு பரிகாரமும் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளனர். துரைமாணிக்கம் எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை. விளம்புகை பரிகாரம் பெற வாதிகள் அருகதையற்றவர்கள் என நீதிமன்றம் முடிவிற்கு வந்தால் மாற்றுப்பரிகாரமாக வாதிகளுக்கு "C" அட்டவணைச் சொத்தில் 3/5 பாகம் கிடைக்கக்கூடியது எனவும் தீர்ப்பாணை வழங்கக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(10) இருதரப்பு வாதங்கள். மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள், வழக்குரை ஆகியவை கவனமாக பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் 14.4.1990 ஆம் தேதியில் 1 ஆம் மனுதாரரின் கணவர் கிள்ளிவளவனின் தந்தையான துரைமாணிக்கம் பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்ததாகவும், அதன் அடிப்படையில் சொத்தானது 1 ஆம் மனுதாரரின் கணவர் கிள்ளிவளவனுக்கு முழு உரிமையானது என்றும் இந்த விபரம் திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.82/1994 மற்றும் கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.308/1995 ஆகிய வழக்குகளில் கிள்ளிவளவன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலிருந்து 1 முதல் 3 வாதிகளுக்கு தெரியும் என்றும், 1994, 1995 ஆண்டுகளிலேயே 14.4.1990 தேதியிட்ட உயில் குறித்து வாதிகளுக்கு தெரிந்தே

கடந்த 20 வருடங்களாக உயிலை ஆட்சேபித்து அதை கேள்விக்குரியதாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யாததால் விளம்புகை பரிகாரம் கோரிய இந்த வழக்கானது காலவரையறையால் பாதிக்கப்பட்டது என்றும், அதனால் உ.வி.மு.ச. கட்டளை 7 விதி11 ன்கீழ் வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டுளள்து. அசல் வழக்கு எண். 82/1994 ன் தீர்ப்புரையிலிருந்து உயில் குறித்து எந்த எழுவினாவும் வனையப்படவில்லை என தெரிகிறது. 23.12.1991 தேதியிட்ட குடும்ப ஏற்பாடு உண்மையானதா என எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. ஆனால், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய வழக்குகளில் அந்த எழுவினா குறித்து விவாரிக்கவேண்டிய அவசியமில்லை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. 2 ஆம் வாதியான மணிமொழி அவ்வழக்கின் தாவா சொத்தின் அனுபோகத்தில் இருப்பதாக முழு விசாரணைக்குப்பின்னர் முடிவு செய்து அவருக்கு ஆதரவாக அவ்வழக்கின் தாவா சொத்தில் கிள்ளிவளவன் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உயில் ஆவணமானது ஒரு நபர் அவரது வாழ்நாளில் எத்தனை முறை வேண்டுமானாலும் மாற்றி எழுதக்கூடியதாகும். உயில் ஆவணம் எழுதிய தேதிக்குப் பின்னரே 23.2.1991 ஆம் தேதியில் குடும்ப ஏற்பாடு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது வழக்குரை கட்சியாகும். குடும்ப ஏற்பாடு உண்மையானதா, பொய்யானதா என்பது சாட்சிகளை விசாரித்து விசாரணை சமயத்திலேயே முடிவுசெய்யப்படும். எனவே, 14.4.1990 ஆம் தேதியிட்ட உயில் ஆவணம் இறுதி ஆவணமாக முடிவு செய்ய இயலாது. மேலும், 1995 ஆம் ஆண்டு வழக்கிற்குப்பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை

தரப்பினர்களுக்கிடையே எந்த பூசலும் இருந்ததாக தெரிய வரவில்லை. 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் 4 ஆம் பிரதிவாதி வழக்கிடைச் சொத்தில் உறவுமுறைகளை அனுகூலமாக எடுத்துக்கொண்டு தன் உறவினர்களுடன் வந்ததாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. 9.11.2017 ஆம் தேதியில் கிள்ளிவளவன் 4, 5 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அசல் வழக்கில் வழக்குமூலமானது 23.12.1991 ஆம் தேதியில் குடும்ப ஏற்பாடு எழுத்துமூலமாக எழுதப்பட்ட தேதியிலும், 9.11.2017 ஆம் தேதியில் கிள்ளிவளவன் செட்டில்மெண்ட் ஆவணம் 4, 5 பிரதிவாதிகள் பெயரில் எழுதிவைத்த தேதியிலும் 30.6.1991 ல் 22.10.2010 தேதியில் துரைமாணிக்கம், கிள்ளிவளவன் இறந்த தேதியிலும் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. 1994, 1995 ஆம் ஆண்டுகளில் வழக்குச் சொத்தில் வாதிகள் அனுபோகத்தில் இருந்ததாக நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்டு, 2 ஆம் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டுள்ள நிலையிலும், அதன்பின்னர் 2019 ஆம் ஆண்டு வரை வாதிகளுக்கும், 4 ஆம் பிரதிவாதி அல்லது 1 ஆம் பிரதிவாதியின் கணவர் கிள்ளிவளவனுக்கிடையே எந்த பிரச்சினையும் இல்லை என அறியமுடிவதாலும் வழக்குச் சொத்தில் வாதிகளின் உரிமை ஆவணப்படி மறுக்கப்பட்ட விபரம் வாதிகள் வில்லங்கச் சான்றிலிருந்து தான் தெரிய வந்ததாக வாதிகள் சொல்வதை இந்நீதிமன்றம் ஏற்கிறது. மேலும், வழக்குமூலம் வழக்குரைப்பத்திகளில் வாதிகள் சொன்னவாறு 9.11.2017 க்கு பின்னர் எழுந்ததாக இந்நீதிமன்றம் ஏற்கிறது. அதனால், அதிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் அதாவது 31.10.2018 ஆம் தேதி வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் வழக்கு காலவரையறையால்

பாதிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து வழக்குரை நிராகரிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இந்த மனு 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2021 ஆம் ஆண்டு **டிசம்பர் திங்கள் 13 ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

**(ஒ-ம்) அ. மலர்விழி**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**
**நீதிபதி, தஞ்சாவூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்...இல்லை**

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1. | ............................ | கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 308/95 ன் வழக்குரையின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.2 | .......................... | கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 308/95 ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.3. | 6.12.1999 | கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 308/95 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் |

| | | |
|---|---|---|
| | | சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.4. | 6.12.1999 | கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 308/95 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.5. | ............................... | திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 82/1994 ன் வழக்குரையின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.6 | ............................... | திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 82/1994 ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.7 | 26.9.1997 | திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 82/1994 ல் ஏற்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.8 | 26.9.1997 | திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 82/1994 ல் ஏற்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.9 | 14.4.1990 | துரைமாணிக்கம் என்பவர் எழுதிவைத்த உயிலின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும்**

**சான்றாவணங்கள் இல்லை.**

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**

**நீதிபதி, தஞ்சாவூர்.**

**உத்தரவு**

**அசல் வழக்கு எண்.135/2018ல்**

**இடைநிலை மனு எண். 75/2019**

**நாள். 13.12.2021**